மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கனம் உறுப்பினர் அவர்களுடைய கருத்துக்கள் பரிசீலனைக்கு உரியவை. பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கலாம் என்று கருதுகிறேன்.

திரு. ஜெ. பெள்ளி கௌடர் : ஸார், டாக்டர்கள் இல்லாத ஆஸ்பத்திரிகள் ஏராளமாக இருந்துகொண்டிருக்கின்றன. அந்தக் குறையைப் போக்க சர்க்கார் தீவிரமான நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : டாக்டர் இல்லாத மருத்துவ மனைகள் ஏராளமாக இருக்கின்றன என்று கூறுவது தவறானது. டாக்டர்கள் இல்லாத இடங்களில் டாக்டர்களைப் போட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. எங்காவது டாக்டர் இல்லை என்று குறிப்பாக கனம் உறுப்பினர் தகவல் கொடுத்தால் நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி மருத்துவ மனை, தாலூகா தலைநகர மருத்துவ மனை பல ஆண்டுகளாக அங்கு எம்.பி.பி.எஸ். டாக்டர் போடுவதே இல்லை. இனிமேலாவது போட அரசாங்கம் ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மருத்துவ மனையில் டி.எம். அண்ட் எஸ். படித்த டாக்டர் போடப்பட்டிருக்கிறது. எம்.பி., பி.எஸ். படித்தவரைத்தான் போடவேண்டும் என்ற விதிமுறை கிடையாது. அங்கு பணி புரியும் டாக்டர் திருப்திகரமாகப் பணிபுரிவதால் தற்போது எம்.பி., பி.எஸ். படித்த டாக்டரைப் போடும் உத்தேசம் இல்லை.

Thiru T. Martin : May I request the Hon. Minister to state whether there is any proposal to associate Homoeopathy doctors with Government hospitals in view of the shortage of Civil Assistant Surgeons ?

The Hon. Thiru S J. Sadiq Pasha : There is no such proposal at present.

113. வினா—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : மதிப்பிற்குரிய பொதுச் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :

(அ) சிதம்பரம் டவுன் அரசாங்க வைத்திய நிலையத்தை இட நெருக்கடி காரணமாக வேறு இடத்திற்கு மாற்றும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) தேவையான நிலத்தைக் கைவசப்படுத்தி, புதிய மருத்துவ மனைக் குறிய கட்டிடங்களைக் கட்டிய பிறகே, மருத்துவ மனை இருக்கும் இடத்தை மாற்ற இயலும்.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : ஸார், இது வரையில் இந்தக் கட்டடத்தை அமைக்காததன் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நில ஆர்ஜிதம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆர்ஜிதம் செய்யப்பட்ட பிறகு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. எம். பூபதி : சிதம்பரம் ஆஸ்பத்திரியில் மட்டும் இட நெருக்கடி என்பது இல்லை. பொதுவாகவே சர்க்கார் ஆஸ்பத்திரிகளில் இட நெருக்கடி இருக்கிறது. குறிப்பாக கோவையிலே 700 பெட்கள் இருக்கின்றன.

அங்கே நோயாளிகள் 1,400 பேர்கள் இருக்கிருர்கள். இதே நிலே பல வேறு இடங்களிலும் இருக்கிறது. இந்த நிலேயை மாற்ற இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதைப்பற்றிக் கனம் உறுப்பினர் அவர்களுடைய கருத்து பரிசீலனே செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலேவர் : இது சிதம்பரம் நகர மருத்துவ மனேயைப் பற்றிய வினு. திரு. ரா. ரா. முனுசாமி அவர்கள் அதைப்பற்றி கேட்பார்கள்.

திரு. ரா. ரா முனுசாமி : செஞ்சி வட்டத்தில் அனந்தபுரம், அவலூர்பேட்டை மருத்துவமனேகளில் சரியான முறைப்படி டாக்டர் இயங்கவில்லே என்ற காரணத்திஞல், சுற்றி ஏராளமான கிராமங்கள் இருப்பதால், அங்கு ஒரு எம். பி. பி. எஸ். டாக்டர் போட அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

(பதில் இல்லே.)

நகர மன்ற ஆணேயாளர்கள்

*** 114 வினு—திரு. கே. பி. எஸ். மணி :** மதிப்பிற்குரிய தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தற்போது உள்ள முனிசிபாலிட்டிகளில் எத்தனே தாழ்த்தப்பட்ட வகுப்பை சேர்ந்த முனிசிபல் கமிஷனர்கள் உள்ளனர் ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தற்போது 8 தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த நகராட்சி ஆணேயர்கள் உள்ளனர்.

திரு. கே. பி. எஸ். மணி : மொத்தம் எத்தனே கமிஷனர்கள் இருக்கிருர்கள்? இந்திய அரசியல் சட்டப்படி கொடுக்கக்கூடிய 16 சத விகிதத்தின்படி அந்த 8 பேர்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறதா? இன்னும் கொடுக்கவெண்டிய அவசியம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : எல்லா வகையான நகராட்சிகளேயும் சேர்த்து மொத்தம் 84 இருக்கிறது. அந்த நகராட்சிக்கு தேர்ந்தெடுக்கப்படுகிற முறை விகிதாசாரத்தின் அடிப்படையில் பிரமோஷன் கொடுக்கப்படுவதில்லே. உரிய விதிகளேயும், தகுதியும் கொண்டுதான் கொடுக்கப்படுகிறது. அந்த வகையிலே 8 பேர்கள் இப்பொழுது பணியாற்றிக்கொண்டிருக்கிருர்கள்.

திரு. மா. பா. சாரதி : உத்தியோக நியமனத்தில்தான் அந்த வகுப்புவாரி முறையை அனுஷ்டிக்கவேண்டும் என்பது விதி. உத்தியோகங்களுக்கும் அந்த வகுப்பு வாரி முறை அனுஷ்டிக்க வேண்டுமா என்று கேட்கிறேன். 100 கமிஷனர்கள் இருந்தால், அதற்குத் தகுந்தவாறு அரிஜனங்களுக்கு இவ்வளவு கமிஷனர் கொடுக்க வேண்டும் என்ற ஒரு விதி இருக்கிறதா என்று கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : அப்படிப்பட்ட விதி இல்லே என்று தான் ஏற்கனவே அறிவித்திருக்கிறேன்.

THIRU K. VINAYAKAM ; Sir, in the matter of recruitment of these Commissioners to these municipalities, is it not a fact that they are not recruited on the basis of community and that they are promoted to this Office on account of their efficiency. In such an event, other things being equal, will not the case of the Depressed Classes be considered in preference to the men belonging to the other community ?